**திரு.ஜெ.குமரகுருபரன், இ.ஆ.ப.,**

மேலாண்மை இயக்குநர்


<u>அபராதத் தொகை தள்ளுபடி செய்யும் திட்டம் - 2017</u>

<u>அபராதத் தொகை தள்ளுபடி செய்யும் திட்டத்தில் சேர்ந்து பயன்பெறுவதற்கான வழிமுறைகள்- திருத்தம்.</u>

அசல் நிலுவைத் தொகை முழுவதும் ஒரே தவணையில் ஆன்லைனில் மட்டுமே செலுத்த வேண்டும் என்ற வழிமுறையில் கேபிள் ஆபரேட்டர்களின் கோரிக்கையினை ஏற்று, ஆன்லைன் மூலமாகவும் அல்லது வங்கி வரைவோலை மூலமாகவும் செலுத்தலாம் என திருத்தம் இதன்மூலம் கீழ்க்கண்ட வழிமுறைகளுடன் வெளியிடப்படுகிறது.

<u>அசல் நிலுவைத் தொகையை செலுத்துவதற்கான வழிமுறைகள்.</u>

அ. உள்ளூர் கேபிள் ஆபரேட்டர் செலுத்த வேண்டிய நிலுவை அசல் தொகையை ஆன்லைனில் பார்த்து தெரிந்துகொள்ள வேண்டும்.

ஆ. நிலுவை அசல் தொகை முழுமைக்கான வங்கி வரைவோலை எடுக்க வேண்டும். (பகுதி தொகைக்கான வங்கி வரைவோலை ஏற்கப்படமாட்டாது)

இ. வங்கி வரைவோலையை சம்பந்தப்பட்ட மாவட்ட துணை மேலாளரிடம் ஒப்படைக்க வேண்டும்.

ஈ. மாவட்ட துணை மேலாளர் நிலுவை அசல் தொகையுடன் வங்கி வரைவோலையை ஒப்பிட்டு சரிப்பார்த்து பெற்றுக்கொள்ள வேண்டும்.

உ. துணை மேலாளர் பெறப்பட்ட வங்கி வரைவோலை தினசரி தலைமையகத்திற்கு பணம் செலுத்தியவர் விவரப் பட்டியலுடன் அனுப்பி வைப்பார்.

ஊ. வங்கி வரைவோலையில் குறிப்பிடப்பட்ட தொகை எந்த தேதியில் நிறுவனக் கணக்கில் வரவு வைக்கப்படுகிறதோ அன்றே அபராதத் தொகை தள்ளுபடிக்கான சான்று LCO Login-ல் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். மேலும், தள்ளுபடிக்கான சான்று பதிவு தபாலில் உள்ளூர் கேபிள் ஆபரேட்டருக்கு அனுப்பி வைக்கப்படும்.

மேலாண்மை இயக்குநருக்காக